செ.வெ.எண்: 1066 நாள்: 03/12/10

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

## செய்தி குறிப்பு

மாண்புமிகு குடிசைமாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாட்டு துறை அமைச்சர் அவர்கள் 02.12.2010 அன்று காலை வடசென்னை பகுதியில் உள்ள கேசவபிள்ளை பூங்கா மற்றும் பி.எஸ்.மூர்த்தி நகர் பகுதிகளில் மிகவும் பழுதடைந்த அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பதிலாக புதிதாக கட்டப்பட்டுவரும் குடியிருப்பு பணிகளை ஆய்வு செய்தார்கள். அத்தருணம் கேசவ பிள்ளை பூங்கா பகுதியில் தற்போது கட்டப்பட்டுவரும் 192 அடுக்குமாடி குடியிருப்புகளின் முன்னேற்ற விபரம் குறித்து ஆய்வு செய்தார்கள். இக்குடியிருப்புகள் வரும் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக முடிக்கப்பட்டு தகுதியுடைய குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள். மேலும் இப்பகுதியில் பழுதடைந்துள்ள குடியிருப்புகளை அகற்றிவிட்டு புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு பணிகளை உடன் தொடங்க வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.

<u>பி.எஸ்.மூர்த்தி நகர்</u>

வடசென்னை பி.எஸ்.மூர்த்தி நகர் பகுதியில் தற்போது கட்டப்பட்டுவரும் 100 குடியிருப்புகளுக்கான முன்னேற்றத்தினை ஆய்வு செய்து மீதமுள்ள 220 பழுதடைந்துள்ள குடியிருப்புகளை அகற்றிவிட்டு அப்பகுதியில் மீண்டும் புதிய குடியிருப்புகள் அமைக்க போதிய இடம் இல்லாததன் காரணமாக மூர்த்திங்கர் தெருவில் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் உள்ள சுமார் 700 குடிசைவாசிகளுக்கும் சேர்த்து மொத்தமாக அடுக்குமாடி குடியிருப்புகள் அமைக்க சாத்திய கூறுகளை ஆராய்ந்து திட்டபிரேரணைகள் விரைந்து தயாரிக்குமாறு அறிவுறுத்தினார். மேலும் மூர்த்திங்கர் தெருவில். வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் உள்ள மேற்கண்ட பகுதிக்கும் சென்று பார்வையிட்டார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வின்போது வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.அ.இராமலிங்கம், தலைமைப் பொறியாளர் திரு.பெ.இளங்கோவன் மற்றும் வாரிய பொறியாளர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

இரா. சேகர் 2/12/10

1/1